**தொல்லியல் பட்டப்பின்படிப்பு நிறுவனம் - 2019**

---

1.1 **அபிப்பிராயம்**

களணிய பல்கலைக்கழகத்திற்கு இணைந்துள்ள தொல்லியல் பட்டநிலைப் பின்படிப்பு நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தில் 18 ஆவது பிரிவு பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 1985 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க தொல்லியல் பட்டநிலைப் பின்படிப்பு நிறுவனத்தின் விபரக் குறிப்பில் 20 ஆவது பிரிவு மற்றும் பல்கலைக்கழக சட்டத்தில் 107 (5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு தரநியமங்களின் (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

1.3. **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து நிறுவனத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது அதிகார சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையபாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

---------------------

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

------------------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான

‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்

### 1.6.1 கிடைக்கப்பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் அட்டுறு செலவில் உள்ளடக்கியுள்ள மேலதிக சேவைகளை வழங்கும் எயாவின் கார்ட் நிறுவனத்திடம் செலுத்தப்பட வேண்டிய 2019 ஆம் அண்டு திசெம்பர் மாதத்திற்கு ஏற்புடையதான ரூபா.147,119 தொகை 2020 மே 31 ஆந் திகதி வரை செலுத்தப்படவில்லை. | முகாமைத்துவ தீர்மானங்களின்படி எதிர்வருங் காலத்தில் கொடுப்பனவு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | செலுத்தப்பட வேண்டிய செலவினங்களை உரியவாறு சீராக்குதல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை | கணக்காய்வு அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவை<br>(i) நிதி ஒழுங்குவிதி 102,103 ,104 மற்றும் 2017 மே 04 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | இறுதியாக நூலகப் புத்தகங்களின் ஆய்வு 2017 ஆம் ஆண்டில் மேற்கொண்டிருந்ததுடன், அதன்போது வெளிப்படுத்தியிருந்த 216 காணமல்போன புத்தகங்கள் மற்றும் மற்றும் 588 வெளியீடுகள் தொடர்பில் சுற்றுநிருபம் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | ஆரம்ப விசாரணை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், அதன்படி எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்குவிதிபடி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ii) நிதி ஒழுங்குவிதி 757(2) | 2019 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக பொருட் மீளாய்வு மேற்கொண்டிருந்ததுடன், அதன்போது வெளிப்படுத்திய ரூபா.510,093 பெறுமதியான 04 பொருட்கள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி படி செயலாற்றப்படவில்லை. | பிரிவுத் தலைவர்களால் விடயங்களை ஆராய்ந்து அதன்படி எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்கு விதிபடி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 1985 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க தொல்லியல் பட்டப் பின் படிப்பு நிறுவன விபரக் குறிப்பீட்டில் 15(2) ஆம் பிரிவு | விபரக் குறிப்பு பிரகாரம் நிறுவனத்தால் சுற்றாடல் விஞ்ஞானம் மற்றும் சமூக-வியல் ஆகிய ஒவ்வொரு கற்கை சபையின் அதிகார-ங்கள், கடமைகள் மற்றும் பணிகள் முகாமைத்துவத்-தால் தீர்மானிக்க வேண்டு-மாயினும், அதன்படி செயலாற்றப்படவில்லை. | எதிர்வருங் காலத்தில் செவ்வையாக்குவ தற்கு நடவடிக்கை மேற்கொள்-ளப்படும். | விபரக் குறிப்பு-படி நடவடிக்கை மேற்கொள்ளப்-படுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

## 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா.51,823,178 பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரோத்து கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா.34,333,293 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா.17,489,885 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சியடைதலுக்கு தொழில்பாட்டு செலவு அதிகரித்தலும் பிரதான காணரமாகியிருந்தது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தொல்லியல் பட்ட நிலைப் பின் படிப்பு நிறுவனத்தில், Notional Trust என்ற புறம்பான நிறுவனத்தின் அலுவலகமொன்று பேணிச் செல்லுதல் மற்றும் ICOMASS என்ற நிறுவனத்தின் அலுவலக முகவரியாக தொல்லியல் பட்டப் படிப்பு பின் நிறுவனத்தின் முகவரி பயன்படுத்தப்பட்டு அதன் கூட்டங்களை நடாத்துவதற்கு நிறுவனத்தின் கேட்போர்கூடத்தை எந்தவொரு கட்டணமும் செலுத்தாது பயன்படுத்தியிருத்தல் தொடர்பாக கணக்காய்வில் சுட்டிக் காட்டிய பின்னர், குறித்த நிறுவனங்கள் மற்றும் பட்டநிலை பின்படிப்பு நிறுவனம் என்பன 02 உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டி-ருந்தன. உடன்படிக்கைகளை மேற்கொள்ளும்போது எந்தவொரு கட்டணமும் அறவிடப்படாத வகை-யிலும் இரண்டு நிறுவனங்களும் ஒவ்வொன்றுக்கு சேவைகளை | 2020 ஆண்டு தொடக்கம் இரண்டு நிறுவனங்களிலும் மேற்கொண்டுள்ள சேவைகள் தொடர்பாக அறிக்கைகளை முகாமைத்துவத்திடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன. | நிறுவனத்திற்கு நன்மை பயக்கும் வகையில் உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| வழங்குதல் தொடர்பான நிபந்தனைகளை உள்ளடக்கியிருப்பினும், குறித்த நிறுவனங்களிலிருந்து உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகள் பட்டநிலை பின்படிப்பு நிறுவனத்திடம் கிடைக்கப்பெறுகின்றதா என்பதற்கான உறுதிப்பாடுகளை கணக்காய்வின்போது பெற்றுக்கொள்வதற்கு முடியவில்லை. | | |
| (ஆ) நிறுவனத்தின் நிருவாக கட்டிடத்தில் பொருத்தியிருந்த செலவு ரூபா.55,000 ஆன விரல் அடையாள இயந்திரம் 2019 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆந் திகதி காணமல் போயிருந்ததுடன், அது தொடர்பாக பரிசோதனை செய்து அதற்கு பொறுப்பு கூற வேண்டிய தரப்புகளை அடையாளம் காணப்பட்டு, நட்டங்களை அறவிடுவதற்கு கணக்காய்வு திகதியான 2020 மே 31 ஆந் திகதியிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | எயர்வித் கார்ட் போர்ஸ் சிகியுரிட்டி க்லின் அண்ட் ஜெனிடோரியல் சர்விஸ் தனியார் கம்பெனியிடம் செலத்தப்பட வேண்டிய தொகையிலிருந்து கழித்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவிடுதல் |

## 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ)இந்த நிறுவனத்தில் கற்கைநெறிகள் வார இறுதி நாட்களில் நடாத்தப்படுவதுடன், நிரந்தர பணியாற்தொகுதியில் 9 பேர் மற்றும் 2018/2019 கற்கை ஆண்டுக்காக வெளியக விரிவுரையாளர்கள் 6 பேர் என்ற வகையில் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. போதனைகள் நடாத்தல் தொடர்பான பதிவேடு பரிசோதனை செய்கையில் உரிய நேரத்திற்கு போதனைகள் நடாத்தப்படாமை தொடர்பாக பதில் கடமையாற்றும் பணிப்பாளர் அந்த பதிவேடுகளில் குறிப்பு வைத்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், மீளாய்விற்கான ஆண்டில் போதனை நடாத்தல் தொடர்பாக பேணிச் செல்கின்ற பதிவேடு உரிய மேற்பார்வையின்றி பேணிச் செல்வதாக அவதானிக்கப்பட்டது. | எதிர்வருங் காலங்களில் இவ்வாறான நிலைமைகளை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் | போதனைகள் நடாத்தல் தொடர்பாக முகாமைத்துவத்தல் உரிய மேற்பார்வை செய்தல் |

| | | |
|---|---|---|
| (ஆ)நிறுவனத்தின் ஆராய்ச்சியுடன் கூடிய பட்டப் படிப்பு கற்கை நெறிக்கு ஏற்புடையதான பரீட்சை பெறுபேறுகள் வெளியிடல் தாமதமாதல் தொடர்பாக மேற்கொண்ட பரிசோதனையின்போது, ஆராய்ச்சிக் கட்டுரை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் பரிசோதகர்களிடம் 60 நாட்கள் தாமதமடைந்து கையளிக்கப்பட்டிருத்தல் காணப்பட்டது. முதலாவது பரிசோதகர் மற்றும் இரண்டாவது பரிசோதகர் ஆகியோரிடம் வழங்கிய பின்னர் பரிசோதனை செய்து மீண்டும் வழங்குவதற்கு 03 மாதங்களுக்கு அதிகமான காலம் எடுத்தல். வாய் மொழி மூலமான பரிசோதனைக்கு அழைப்பதற்கு தாமதமாதல் மற்றும் செனட் சபையிடம் சமர்ப்பிப்பதற்கு தாமதமடைதல் போன்ற விடயங்கள் அறியவந்தன. | எதிர்வருங் காலங்களில் இவ்வாறான தாமதங்களை குறைத்துக்கொள்ளும் பொருட்டு நடவடிக்கை எடுத்தல் | தாமதமின்றி பரீட்சை பெறுபேறுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிமுறை மற்றும் நல்லாட்சி

### 4.1 வருடாந்த செயற்றிட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ருவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் 04 ஆவது பந்தி பிரகாரம் கற்கை நிறுவனங்கள் போன்ற நியதிச் சட்ட நிறுவனங்கள் சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் நீண்டகால நோக்குகையுடன், உரிய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் எய்துக் கொள்வதை இலக்காக கொண்ட செயற்பாடுகளை உள்ளடக்கி வருடாந்த செயற்றிட்டம் தயாரிக்கப்பட வேண்டுமாயினும், இந்த நிறுவனம் 2019 ஆம் ஆண்டுக்கு செயற்றிட்டம் தயாரிக்கவில்லை. | 2019 செயற்றிட்டம் பொருட்டு முகாமைத்துவ சபையின் அனுமதி பெற்றுக்கொள்ளவில்லை என்பதுடன், 2020 இல் முகாமைத்துவ சபை அனுமதி பெற்றுக்கொண்டு அதற்கு அமைவாக பணியாற்றப்படும். | இலக்காகக் கொண்டுள்ள நோக்கங்களுக்கு ஏற்புடையதாக செயற்றிட்டம் தயாரித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். |